
# 11 இயேசு செய்த புதுமைகள்



11.1 இயேசு செய்த புதுமைகள்

இயற்கை நியதிகளுக்கு அமைவாக இடம்பெறாத நிகழ்வு புதுமை என அழைக்கப்படுகின்றது.

## இயேசு செய்த புதுமைகளின் வகைகள்

1
இயற்கையுடன் தொடர்புடையவை
உ+ம் : புயலை அடக்குதல்

2
நோயாளரைக் குணமாக்குதல்.
உ+ம் : உடல் ஊனமுற்ற பெண் ஓய்வு நாளில் குணமடைதல்.



3
அசுத்த ஆவியை விரட்டுதல்
உ+ம் : கெரசேனரில் பேய் பிடித்தவரை நலமாக்குதல்.

4
இறந்தவர் உயிர்பெறல்
உ+ம் : ஜாயிரின் மகள் உயிர் பெறல்.

## 1. இயற்கையுடன் தொடர்புடைய புதுமை

### காற்றையும் நீரின் கொந்தளிப்பையும் அடக்குதல்

ஒருநாள் இயேசுவும் அவருடைய சீடர்களும் படகில் ஏறியதும் ''ஏரியின் அக்கரைக்குச் செல்வோம் வாருங்கள்'' என்று அவர் அவர்களுக்குச் சொன்னார். அவர்களும் படகைச் செலுத்தினார்கள். படகு போய்க் கொண்டிருந்தபோது அவர் ஆழ்ந்து தூங்கிவிட்டார். அப்பொழுது ஏரியில் புயல் அடித்தது. படகு நீரால் நிரம்பியது. அவர்கள் ஆபத்துத்துக்கு உள்ளானார்கள். அவர்கள் அவரிடம் வந்து ''ஆண்டவரே ஆண்டவரே சாகப்போகிறோம்'' என்று சொல்லி அவரை எழுப்பினார்கள். அவர் விழித்தெழுந்து காற்றையும் நீரின் கொந்தளிப்பையும் கடிந்து கொண்டார். உடனே அவை ஓய்ந்தன. அமைதி உண்டாயிற்று. அவர் அவர்களிடம் ''உங்கள் நம்பிக்கை எங்கே?'' என்றார். அவர்கள் அச்சமும் வியப்பும் நிறைந்தவர்களாய் ''இவர் காற்றுக்கும் நீருக்கும் கட்டளையிடுகிறார். அவை இவருக்குக் கீழ்ப்படிகின்றனவே. இவர் யாரோ?'' என்று ஒருவரோடு ஒருவர் பேசிக் கொண்டார்கள்.

(லூக்கா 8 : 22 - 25)

### புயலை அடக்கிய புதுமையினால் நமக்கு கிடைக்கும் செய்தி

★ இயேசு உண்மையாகவே இறைமகன் என்பதும்

★ இயற்கையும் அவருக்குக் கீழ்ப்படிகின்றன என்பதும்

இதனால் நாமும் இயேசுவில் நம்பிக்கை வைத்து அவரின் வார்த்தைக்குக் கீழ்ப்படிய வேண்டும். ஏனெனில் இறைவார்த்தைக்கு ஏற்ற வகையில் எந்நேரமும் சரியானதை மட்டும் செய்ய முயற்சி எடுக்க வேண்டும். எமது நம்பிக்கை தளர்ச்சி அடையும்போது செபிப்பதனால் மீளவும் நம்பிக்கையைக் கட்டியெழுப்ப முயற்சி செய்ய வேண்டும்.

## 2. நோயாளரை குணமாக்குதல் தொடர்பான புதுமைகள்

**உடல் ஊனமுற்ற பெண் ஓய்வு நாளில் குணமடைதல்.**

ஓய்வு நாளில் இயேசு தொழுகைக்கூடம் ஒன்றில் கற்பித்துக் கொண் டிருந்தார். பதினெட்டு ஆண்டுகளாகத் தீய ஆவிபிடித்து உடல் நலம் குன்றிய பெண் ஒருவர் அங்கு இருந்தார். அவர் சிறிதும் நிமிர முடியாதவாறு கூன் விழுந்த நிலையில் இருந்தார். இயேசு அவரைக் கண்டு அருகே கூப்பிட்டு ''அம்மா உமது நோயிலிருந்து நீர் விடுவிக்கப்பட்டுள்ளீர்'' என்று கூறி, தம் கைகளை அவர்மீது வைத்தார். உடனே அவர் நிமிர்ந்து கடவுளைப் போற்றினார்.

(லூக்கா 13: 10 - 13)

இப்புதுமையின் மூலம் இயேசு அப்பெண்ணின் வேதனையைக் கண்டு உதவிபுரிந்த முறை வெளிப்படுத்தப்படுகின்றது. அப்பெண் இயேசுவிடம் கேட்காமலே இயேசு உதவி செய்ய முன்வருகிறார். நாமும் பிறரின் வேதனைகளைக் கண்டும் காணாதவராக இராது உதவிசெய்ய முன்வர வேண்டும்.

நாம் நோயாளருக்காக நாளாந்தம் செபிக்க வேண்டும். உடல், உள நோயினால் வருந்தும் மக்களுக்காகவும் செபிக்க வேண்டும். அவர்கள் அந்நோயிலிருந்து விரைவில் சுகம்பெற மன்றாட வேண்டும்.

### 3. அசுத்த ஆவியை விரட்டும் புதுமை

**கெரசேனர் பகுதியில் பேய்ப்பிடித்தவரை நலமாக்குதல்.**

அவர்கள் கலிலேலயாவுக்கு எதிரே இருக்கும் கெரசேனர் பகுதியை நோக்கிப் படகைச் செலுத்தினார்கள். கரையில் இறங்கியதும் அந்நகரைச் சேர்ந்த ஒருவர் அவருக்கு எதிரே வந்தார். பேய்ப்பிடித்த அவர் நெடுநாளாய் ஆடை அணிவதில்லை. வீட்டில் தங்காமல் கல்லறைகளில் தங்கி வந்தார். இயேசுவைக் கண்டதும் கத்திக்கொண்டு அவர்முன் விழுந்து ''இயேசுவே உன்னத கடவுளின் மகனே உமக்கு இங்கு என்ன வேலை? என்னை வதைக்க வேண்டாம் என உம்மிடம் மன்றாடுகின்றேன்.'' என்று அவர் உரத்தக் குரலில் கூறினார். ஏனெனில் அவரை விட்டு வெளியேறு அத்தீய ஆவிக்கு இயேசு கட்டளையிட்டிருந்தார். அது எத்தனையோ முறை அவரைப்பிடித்திருந்தது. அவ்வேளைகளில் அவர் சங்கிலிகளாலும் விலங்குகளாலும் கட்டப்பட்டு காவலில் வைக்கப்பட்டிருந்தும் அவற்றை உடைத்து எறிந்து விடுவார். அது மட்டுமல்ல தீய ஆவி அவரைப் பாலை நிலத்திற்கும் இழுத்துச் செல்லும். இயேசு அவரிடம் ''உம் பெயர் என்ன?'' என்று கேட்க அவர் ''இலேகியோன்'' என்றார். ஏனெனில் பல பேய்கள் அவருக்குள் புகுந்திருந்தன. அவை தங்களைப் பாதாளத்துக்குள் போகப் பணிக்க வேண்டாமென அவரை வேண்டின.

அங்கு ஒரு மலையில் பன்றிகள் பெருங்கூட்டமாய் மேய்ந்து கொண்டிருந்தன. அவற்றுக்குள் புகும்படி தங்களை அனுமதிக்குமாறு பேய்கள் அவரை வேண்டின. அவரும் அதற்கு அனுமதி கொடுத்தார். பேய்கள் அவரை விட்டு வெளியேறி பன்றிகளுக்குள் புகுந்தன. பன்றிக் கூட்டம் செங்குத்துப் பாறையிலிருந்து ஏரியில் பாய்ந்து வீழ்ந்து மூழ்கியது. பன்றிகளை மேய்த்துக் கொண்டிருந்தவர்கள் நடந்ததைக் கண்டு ஓடிப்போய் நகரிலும் நாட்டுப்புறத்திலும் அறிவித்தனர். நடந்தது என்னவென்று பார்க்க மக்கள் இயேசுவிடம் வந்தனர். பேய்கள் நீங்கப்பெற்றவர் ஆடை அணிந்து அறிவுத் தெளிவுடன் இயேசுவின் காலடியில் அமர்ந்திருப்பதைக்கண்டு அஞ்சினர்.

நடந்ததைப் பார்த்தவர்கள் பேய்பிடித்தவர் எப்படி விடுவிக்கப்பட்டார் என்பதை அவர்களுக்கு அறிவித்தார்கள். அப்பொழுது கெரசேனரை சுற்றியுள்ள பகுதிகளிலிருந்து திரண்டு வந்திருந்த மக்கள் அனைவரும் அச்சம் மேலிட்டவர்களாய்த் தங்களை விட்டுப் போகுமாறு இயேசுவை வேண்டிக் கொண்டனர். அவர் படகிலேறி திரும்பிச் சென்றார். அப்பொழுது பேய்கள் நீங்கப் பெற்றவர் தம்மைக் கூட்டிச் செல்லுமாறு இயேசுவிடம் மன்றாடினார். அவரோ ''உம்முடைய வீட்டிற்குத் திரும்பிப்போய் கடவுள் உமக்குச் செய்ததையெல்லாம் எடுத்துக் கூறும்'' என்று சொல்லி அவரை அனுப்பி விட்டார். அவரும் நகரெங்கும்போய் இயேசு தமக்குச் செய்ததையெல்லாம் அறிவித்தார்.

(லூக்கா 8 : 26 - 36)

இப்புதுமையின் மூலம் இறைமகனான இயேசுவின் வல்லமைக்குப் பேய்களும் கீழ்ப்படிகின்றன எனவும், அவர் எப்போதும் சாத்தான் பிடியிலிருந்து மனிதனை காப்பாற்றினார் எனவும், கூறப்படுகின்றது. நாம் சாத்தானின் சோதனைகளுக்கு உட்படாதவாறு இருக்க இயேசுவிடம் எப்போதும் செபிப்பதோடு எந்நேரமும் எம்மை இறைபாதுகாப்பிற்கு ஒப்படைப்போம். எமது வாழ்வை செப வாழ்வாக அமைத்துக் கொள்வோம்.

## 4. இறந்தவர் உயிர் பெறல்

தொழுகைக்கூடத் தலைவரான யாயீர் இயேசுவிடம் வந்து அவரின் காலில் விழுந்து தம்முடைய வீட்டிற்கு வருமாறு வேண்டினார். ஏனெனில் பன்னிரெண்டு வயதுடைய அவருடைய ஒரே மகள் சாகும் தறுவாயில் இருந்தாள். இயேசு அங்கு செல்லும் வழியில் மக்கள் கூட்டம் அவரை நெருக்கிக் கொண்டிருந்தது. தொழுகைக்கூடத் தலைவருடைய வீட்டிலிருந்து ஒருவர் வந்து ''உம்முடைய மகள் இறந்துவிட்டாள் இனி போதகரைத் தொந்தரவு செய்ய வேண்டாம்'' என்றார்.

இதைக்கேட்ட இயேசு சிறுமியின் தந்தையைப் பார்த்து ‘‘அஞ்சாதீர் நம்பிக்கையோடு மட்டும் இரும். அவள் பிழைப்பாள்’’ என்றார். வீட்டுக்குள் வந்ததும் பேதுரு, யோவான், யாக்கோபு, சிறுமியின் தாய் தந்தையரைத் தவிர வேறு எவரையும் அவர் தம்மோடு உள்ளே வர அனுமதிக்கவில்லை. அவளுக்காக அனைவரும் அழுது கொண்டிருந்தார்கள். இயேசுவோ ‘‘அழாதீர்கள் அவள் இறக்கவில்லை உறங்குகின்றாள்.’’ என்றார். அவள் இறந்துவிட்டாள் என்று அறிந்திருந்ததால் அவரைப் பார்த்து அவர்கள் நகைத்தார்கள். அவர் அவளது கையைப் பிடித்து சிறுமியே எழுந்திரு’’ என்று கூப்பிட்டார். உயிர் மூச்சுத் திரும்பி வரவே, உடனே அவள் எழுந்தாள். இயேசு அவளுக்கு உணவு கொடுக்கப் பணித்தார். அவளுடைய பெற்றோர் மலைத்துப் போயினர். நடந்ததை எவருக்கும் சொல்ல வேண்டாம் என்று அவர்களுக்கு அவர் கட்டளையிட்டார்.

(லூக்கா 8 : 40 - 42, 49 - 56)

இறப்பு இயேசுவிற்கு தூக்கத்தைப் போன்றதாகும். இயேசுவில் நம்பிக்கை வைப்போரை தூக்கத்திலிருந்து எழுப்புவதைப்போல் இறப்பிலிருந்து உயிர்த்தெழச் செய்வார். இந்த நம்பிக்கையுடன் இவ்வுலகில் நல்லவர்களாக நேர்மையுடன் வாழ்வது எமது கடமையாகும்.

எமது வாழ்வில் புதுமைகளை அனுபவிக்க வேண்டுமானால்

- ✝ எல்லாம் இறைவனால் முடியுமென நம்ப வேண்டும்.
- ✝ நம்பிக்கையுடன் செபிக்க வேண்டும்.

## செயற்பாடு

1. இயேசு செய்த புதுமைகளை வகைப்படுத்தி ஒவ்வொரு உதாரணம் தருக.
2. உமது வாழ்வில் புதுமையை அனுபவித்த சந்தர்ப்பமொன்றை எழுதுக.
3. நோயினால் வருந்துபவர்கள் விரைவில் சுகம்பெற சொல்லக்கூடிய செபம் ஒன்றினை எழுதுக.

## வாழ்க்கைக்கு

- வாழ்வின் பிரச்சினைகளின்போது நம்பிக்கையுடன் செபிப்போம்.